ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව]
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (பழையப் பாடத்திட்டம்) - 2016 (II) (2017)**

Second Efficiency Bar Examination for Inspectors of Customs Grade II (Old Syllabus) - 2016 (II) (2017)

**(01) சுங்கச் சட்டம் மற்றும் நடைமுறைகள்**
Customs Law and Procedure

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. "சுங்கத் திணைக்களத்தால் பொருட்களின் இறக்குமதியின் போது பல்வேறு வரிவகைகள் வசூலிக்கப்படும்." அவ்வகையான **ஐந்து** வரிவகைகளைப் பெயரிட்டு அவை ஒவ்வொன்றும் தொடர்பாக சுருக்கமாக தனித்தனியே விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

2. விமானநிலையமொன்றின் பயணிகள் தரிப்பிடத்திலே சுங்கப் பரிசோதகர் ஒருவரினது கடமைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

3. சுங்க வரி மோசடி தொடர்பாக சுங்க அலுவலர்கள் செயற்படுகின்ற சந்தர்ப்பமொன்றிலே சுங்கப் பரிசோதகர் ஒருவராக உமக்கு அந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையை விளக்குக. *(20 புள்ளிகள்)*

4. நீங்கள் கொழும்பு துறைமுகத்தின் பயணிகள் வெளியேறும் வாசலிலே கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கப்பலில் கடமையாற்றும் வெளியூர் வாசியொருவர் 4 லீற்றர் மதுவினை பயணப் பொதியினுள் மறைத்து துறைமுகத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு செய்த முயற்சி அவரினது பயணப் பொதியை பரிசோதித்துப் பார்த்த போது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தின் போது நீங்கள் எடுக்கும் படிமுறைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

5. கொழும்பு துறைமுகத்திலே கொள்கலனை வெளியேற்றும் வாயிலில் (NCT Gate) கடமையில் ஈடுபடும் சுங்க பரிசோதகர் ஒருவரினது கடமைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

6. "சுங்கப் பரிசோதகர் ஒருவர் கடமையில் ஈடுபடும் போது எப்போதும் சீருடையை அணிந்து கொண்டிருக்க வேண்டும்" பரிசீலிக்குக. *(20 புள்ளிகள்)*

7. "சிறந்த முறையில் பேணப்பட்டு வருகின்ற சாக்கு குறிப்பு புத்தகத்தின் மூலம் சரியான முறையில் கடமைகளை நிறைவேற்றுகின்ற சுங்க பரிசோதகரை இனங்காண முடியும்" காரணங்காட்டி விவரிக்குக. *(20 புள்ளிகள்)*

8. சுங்க விசாரணையொன்றின் இடையே சந்தேக நபரொருவரை தடுத்து வைத்திருக்கும்படி சுங்க அலுவலர் ஒருவரினால் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்த விசாரணை நிறைவடையும் வரை அவர் தொடர்பாக நீங்கள் செயற்படுவது எவ்வாறு? *(20 புள்ளிகள்)*

* * *